தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நிரம்பி வழியும் கொண்டனூர் தடுப்பணை

ஆனைகட்டியில் பெய்து வரும் தொடர் மழையால் கொண்டனூர் தடுப்பணை நிரம்பி வழிவதையடுத்து, கவுண்டம்பாளையம் எம்.எல்.ஏ. வி.சி. ஆறுக்குட்டி திங்கள்கிழமை அங்கு ஆய்வு மேற்கொண்டார். மழைக் காலங்களில் கொண்டனூர் பகுதியில் உள்ள கோம்பைப் பள்ளம் உள்ளிட்ட பள்ளங்களின் வழியாக வரும் நீர், யாருக்கும் பயன்படாமல் கேரள பகுதிக்குச் சென்று கொண்டிருந்தது. இந் நிலையில், ஆனைகட்டி பகுதியில் உள்ள 5-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு ஊற்று ஆதாரமாக விளங்கும் வகையில் கொண்டனூர் அரசு நடுநிலைப் பள்ளிக்கு பின்புறம் செல்லும் பள்ளத்தில் தடுப்பணை கட்ட இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை யடுத்து எம்எல்ஏ வி.சி. ஆறுக்குட்டி ரூ.40 லட்சம் நிதி ஒதுக்கினார். இப் பணிகள் முடிவடைந்த நிலையில் தற்போது இங்கு முதன்முதலாக மழைநீர் நிரம்பி வழிகிறது. இதனை ஆய்வு செய்வதற்காக வந்த எம்எல்ஏவிடம் பெ.நா.பாளையம் ஒன்றிய தலைவர் வீரபாண்டி விஜயன், பொதுப்பணித் துறை உதவி செயற் பொறியாளர் கொமாரசாமி, சிவக்குமார் ஆகியோர் இப்பகுதியில் உள்ள நீராதாரங்கள் குறித்து விளக்கினர். பின்னர் அருகிலுள்ள வனத்துறை தடுப்பணை, கண்டிவழி அருகே உள்ள தடுப்பணை யையும் எம்.எல்.ஏ. பார்வையிட்டார். அப்போது, மாங்கரை அருகே வண்ணான் பாறையில் உள்ள அருவியில் விழும் நீரைத் தேக்கிவைக்கும் வகையில் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் தடுப்பணை அமைக்க நிதி ஒதுக்க வேண்டும் என வீரபாண்டி விஜயன் கோரிக்கை விடுத்தார். ஆய்வின்போது, 24.வீரபாண்டி ஊராட்சித் தலைவர் சசி மதன், முன்னாள் துணைத் தலைவர் மருதன், பெ.நா.பாளையம்

வனச்சரகர் நசீர், ஒன்றிய கவுன்சிலர் பிரேமா புனிதராஜ், முன்னாள் உறுப்பினர் நஞ்சன், ஊராட்சி கவுன்சிலர் பழனிச்சாமி, ஊர் மூப்பன் முருகன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**அமராவதி, திருமூர்த்தி அணை நிலவரம்**

திருப்பூர் மாவட்டத்தில் கனமழை பெய்து வரும் நிலையில், அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. அமராவதி அணை: 90 அடி உயரமுள்ள அணையில் திங்கள்கிழமை மாலை 6 மணி நிலவரப்படி நீர் மட்டம் 85.86 அடியாக இருந்தது. அணைக்கு உள்வரத்தாக 1,400 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. 4,035 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணையில் 3,761.85 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. அணையில் இருந்து 158 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது. மழை பொழிவு இல்லை. இது குறித்து பொதுப் பணித்துறையினர் கூறியது: அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் திங்கள்கிழமை மழை பொழிவு இல்லை. பொதுவாக அணையின் நீர்மட்டம் 88 அடியை தாண்டும்போது உபரி நீர் திறக்கப்படும். தற்போது 86 அடியே இருப்பதால் செவ்வாய்க்கிழமை உபரி நீர் திறக்க வாய்ப்பில்லை என்றனர். திருமூர்த்தி அணை: 60 அடி உயரமுள்ள திருமூர்த்தி அணையில் திங்கள்கிழமை காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 40.60 அடியாக இருந்தது. 1,935 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணையில் 1,174.41 மில்லியன் கன அடி நீர் இருப்பு காணப்பட்டது. அணைக்கு பாலாறு வழியாக 23 கன அடி, காண்டூர் கால்வாய் மூலம் 787 கன அடி என மொத்தம் 810 கன அடி நீர் உள்வரத்தாக வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 567 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது. நல்லதங்காள் ஓடையில், அதன் முழுகொள்ளளவான 30 அடியில், தற்போது 28.94 அடி நீர் மட்டம் உள்ளது. அணையில் இருந்து 55 கன அடி தண்ணீர்

வெளியேற்றப்படுகிறது. இதில், 248.820 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. உப்பாறு அணைக்கு நீர் வரத்து ஏதும் இல்லை. திருப்பூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை பெய்த மழை அளவு விவரம்: அவிநாசி 70.20 மி.மீ., திருப்பூர் 47.20 மி.மீ., உடுமலை 39.40 மி.மீ., பல்லடம் 70.50 மி.மீ., தாராபுரம் 10 மி.மீ., காங்கயம் 0.00., மூலனூர் 0.00, மொத்தமாக 237.30 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் சராசரி மழை பதிவு 33.90 மி.மீ. ஆகும்.

## மாட்டுத் தீவன புல் வளர்க்க ரூ.44 லட்சம் மானியம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் 55 ஏக்கரில் கால்நடைத் தீவன புல் வளர்க்க ரூ.44 லட்சம் மானியம் வழங்கப்பட இருப்பதாக தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார். கலசப் பாக்கத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தீவன புல் வளர்க்க ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட கால்நடைத் துறை இயக்குநர் செல்வராஜ் தலைமை தாங்கினார். தொகுதிச் செயலாளர் எஸ்.கோவிந்தராஜ், ஒன்றியக் குழுத் தலைவர் டி.ஜெயராமன், துணைத் தலைவர் எம்.கருணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலசப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் கே.சி.கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். விழாவில் வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு பழங்கோயில் கிராமத்தைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு கால்நடை தீவன புல் வளர்க்க ஏக்கருக்கு தலா ரூ.8 ஆயிரம் வீதம் காசோலைகளை வழங்கிப் பேசியதாவது: திருவண்ணாமலை மாவட்டத்தில் கால்நடைகளுக்குத் தேவையான தீவன புல் சாகுபடி செய்ய கால்நடை சார்பில் 1 ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் தொகையை மானியமாக அரசு வழங்கி வருகிறது. முதல் கட்டமாக கலசப்பாக்கத்தில் தொடங்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை

மாவட்டத்தில் சுமார் 550 ஏக்கருக்கு தீவன புல் சாகுபடி செய்ய ரூ.44 லட்சம் மானியம் வழங்கப்பட உள்ளது. இதேபோல் விவசாயிகளுக்கு 25 சென்டில் பயிர் செய்ய 8 கிலோ சோளம், 1 கிலோ காராமணி ஆகியவை மாவட்டம் முழுவதும் சுமார் 2 ஆயிரத்து 600 ஏக்கர் அளவுக்கு மானியமாக வழங்கப்படவுள்ளது என்றார். இந்நிகழ்ச்சியில் கால்நடை மருத்துவர் வித்யா சேகர், துரிஞ்சாபுரம் ஒன்றியக் குழுத் தலைவர் கோவிந்தராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் கே.செல்வம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**<u>கிருஷ்ணகிரி அணை திறப்பு: பொது மக்களுக்கு ஆட்சியர் வேண்டுகோள்</u>**

கிருஷ்ணகிரி அணையில் திறக்கப்பட்ட தண்ணீர், தென்பெண்ணை ஆற்றில் வந்து கொண்டிருப்பதால் செங்கம், தண்டராம்பட்டு வட்டங்களைச் சேர்ந்த பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு ஆட்சியர் அ.ஞானசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். கிருஷ்ணகிரி அணையில் இருந்து திங்கள்கிழமை காலை 7.25 மணி முதல் 1500 கன அடி உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் தென்பெண்ணை ஆற்றின் வழியாக சாத்தனூர் அணையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. ஓரிரு நாளில் திருவண்ணாமலை மாவட்ட எல்லைக்கு தண்ணீர் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம், தண்டராம்பட்டு வட்டத்தில் தென்பெண்ணை ஆற்றங்கரையோரம் வசிக்கும் பொது மக்கள் தாழ்வான பகுதிகளில் இருந்து மேடான, பாதுகாப்பான பகுதிக்கு செல்லுமாறு ஆட்சியர் அ.ஞானசேகரன் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், இரவு நேரங்களில் தென்பெண்ணை ஆற்றை யாரும் கடக்க வேண்டாம் என்றும், தென்பெண்ணை ஆற்றில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு தொடர்பான புகார்களுக்கு தண்டராம்பட்டு வட்டத்தைச் சேர்ந்தவர்கள் 9487756855 என்ற எண்ணிலும், செங்கம் வட்டத்தைச் சேர்ந்தவர்கள்

9445000518 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு வாகனப் பிரசாரம்

இயற்கை வேளாண்மைக்கு விவசாயிகள் மாறவேண்டும் என்பதை வலியுறுத்தியும், பூச்சிக் கொல்லிகளால் ஏற்படும் பாதிப்பை விளக்கும் வகையிலும், கடலூரில் வாகன பிரசாரப் பயணம் திங்கள்கிழமை தொடங்கப்பட்டது. மாவட்ட அளவில் நடைபெறும் இந்தப் வாகனப் பிரசாரப் பயண தொடக்க விழாவுக்கு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் நிஜாமுதின் தலைமை வகித்தார். நிர்வாகிகள் தங்கம், முத்துசாமி, செந்தமிழ்ச்செல்வன், பாலசுப்பிரமணியன், ராஜேந்திரன், பாபு உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தங்கவேலு பிரசார வாகன பயணத்தை தொடங்கிவைத்தார். உணவுப் பாதுகாப்பு அதிகாரி நல்லதம்பி, பி.எஸ்.என்.எல். துணைப் பொதுமேலாளர் பால்கி, வழக்குரைஞர் தாஸ், விவசாய சங்கப் பிரதிநிதி அப்பாஜி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருநாவுக்கரசு நன்றி கூறினார்.

## 31-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கடலூரில் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (அக்டோபர் 31) நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தலைமையில் மாவட்ட வளர்ச்சிமன்றக் கூடத்தில் அக்டோபர் 31ஆம் தேதி காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது. இதில் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு விளக்கமளிக்க உள்ளனர். எனவே, விவசாயிகள் இதில் பங்கேற்று விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை மட்டும் வலியுறுத்தி விளக்கம் பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஷிமோகா, ஹாசன் அரசு கால்நடை

கல்லூரிகளுக்கு அங்கீகாரம்: அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா ஷிமோகா, ஹாசனில் இயங்கிவரும் அரசு கால்நடை கல்லூரிகளுக்கு மத்திய கால்நடை பராமரிப்பு பேரவை அங்கீகாரம் அளித்துள்ளது என்று சட்டம் மற்றும் கால்நடைபராமரிப்புத்துறை அமைச்சர் டி.பி.ஜெயசந்திரா தெரிவித்தார். இது குறித்து பெங்களூருவில் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது: ஷிமோகா, ஹாசனில் இயங்கிவரும் அரசு கால்நடை கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்கும்படி மத்திய கால்நடை பராமரிப்புபேரவைக்கு விண்ணப்பங்கள் அளித்திருந்தோம். புதுதில்லியில் மத்திய கால்நடை பராமரிப்பு பேரவைத்தலைவர் உமேஷ்சந்திரசர்மா தலைமையில் நடந்த கூட்டத்தில், மாநில அரசின் விண்ணப்பங்களை பரிசீலித்து ஷிமோகா, ஹாசன் கால்நடை கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்க தீர்மானித்துள்ளது. ஷிமோகா அரசு கால்நடை கல்லூரிக்கு 2011 அக்.24-ஆம் தேதி முதலும், ஹாசன் அரசு கால்நடை கல்லூரிக்கு 2012 அக்.24-ஆம் தேதி முதலும் அங்கீகாரம் அளித்துள்ளது. இதுவரை இந்த கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்காத காரணத்தால் அங்கு படித்த மாணவர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டிருந்தது. ஷிமோகா அரசு கால்நடை கல்லூரி உள்கட்டமைப்பு வசதிக்கு ரூ.137 கோடி, ஹாசன் அரசு கால்நடை கல்லூரி உள்கட்டமைப்பு வசதிக்கு ரூ.131 கோடி ஒதுக்கப்பட்டது. அரசு மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இக்கல்லூரிகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதன்மூலம் மாணவர்களிடையே காணப்பட்ட குழப்பம், அச்சம் நீங்கியுள்ளது என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அமராவதி அணை நிரம்பியது; வெள்ள அபாய எச்சரிக்கை**

உடுமலைப்பேட்டை: உடுமலைப்பேட்டை அருகே உள்ள அமராவதி அணை அதன் முழு கொள்ளளவான 90 அடியை எட்டியது. இதனால் அணையிலிருந்து வினாடிக்கு 4 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. இதைத் தொடர்ந்து கரையோரப் பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆவடியில் கொட்டி தீர்த்த மழை**

ஆவடி : ஆவடியில் நேற்று மதியம் கொட்டி தீர்த்த மழையால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி பகுதிவாசிகள் கடும் சிரமப்பட்டனர். ஆவடியில் நேற்று மதியம் 1:00 மணி முதல் 2:45 மணி வரை, பலத்த மழை பெய்தது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியதால் பகுதிவாசிகள் கடந்து செல்ல சிரமப்பட்டனர். முக்கிய சாலைகளில் மழைநீர் தேங்கியதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.சிலர் சாலையில் இருந்த பள்ளங்களால் நிலைதடுமாறி விழுந்தனர். மற்ற பகுதிகளில் மழை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கரும்புக்கு பதிலாக மரவள்ளி மாற்று பயிர்: பள்ளிப்பட்டு பகுதியில் அறிமுகம்**

ஆர்.கே.பேட்டை : மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியில், திருத்தணி, பள்ளிப்பட்டு ஒன்றியங்களில் தான் அதிகளவில் கரும்பு பயிரிடப்படுகிறது. நடப்பு ஆண்டில், அதிக லாபம் தரக்கூடிய, மரவள்ளி கிழங்கு புதிதாக அறிமுகம் ஆகியுள்ளது. தொழிலாளர் பற்றாக்குறை : விவசாய தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் தண்ணீர் பற்றாக்குறையால், நெல் சாகுபடி குறைந்து, கரும்பு சாகுபடி

அதிகரித்தது. பள்ளிப்பட்டு, திருத்தணி, ஆர்.கே.பேட்டை ஒன்றியங்களில், ஆண்டுக்கு, 30 ஆயிரம் டன் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. 7,000 விவசாயிகள் கரும்பு பயிர் செய்து வருகின்றனர். நஷ்டம் : அக்டோபர் முதல் மார்ச் வரையிலான அறுவடை பருவத்தில், கரும்பு வெட்டவும், வெட்டிய கரும்பை ஆலைகளுக்கு அனுப்புவதிலும் தாமதம் ஏற்படுகிறது. இதனால், வெட்டப்பட்ட கரும்பு வயலில் காய்ந்து அவற்றின் எடை குறைகிறது. இதனால், விவசாயிகள் நஷ்டம் அடைகின்றனர்.இதன் காரணமாக, நடப்பு ஆண்டில், நஷ்டத்தை ஏற்படுத்தாத, அதிக லாபம் தரக்கூடிய மரவள்ளி, பள்ளிப்பட்டு பகுதியில் அதிகம் நடவு செய்யப்பட்டுள்ளது. கரும்பை போன்றே இதுவும், 10 மாத பயிர். தண்ணீர் தேவையும் குறைவு : மரவள்ளி, அதிகம் தண்ணீர் தேங்காத பகுதியில் வளரும். தண்ணீர் தேவையும் குறைவு. ஏக்கருக்கு, 15 டன் மகசூல் கிடைக்கும், டன் ஒன்றுக்கு 11 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைக்கிறது.தண்ணீர் தேவை குறைவு தான். மாவு பூச்சி போன்ற ஒரு சில தாக்குதல்கள் தவிர்க்க முடியாதது. இவற்றை எளிதாக சமாளித்து விடலாம். மழைக்காலத்தில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் தேங்கினால், கிழங்கு அழுகிவிடும் அபாயம் உள்ளது. மரவள்ளி கிழங்கு மாவில் இருந்து சவ்வரிசி மற்றும் சில உணவு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மேலும், மாத்திரைகளின் மேற்புறத்தில் உள்ள மாவு போன்ற அடுக்கு, மரவள்ளி மாவினால் தயாரிக்கப்படுவது தான். இதனால், மரவள்ளிக்கு அதிக தேவை உள்ளது.சேலம், நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான சவ்வரிசி தொழிற்சாலைகள் உள்ளதால், தற்போது, அங்கு தான் மரவள்ளிக்கு சந்தை வாய்ப்பு உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் மரவள்ளி கொள்முதல் நிலையம் அமைக்கப்பட் டால், மேலும் பலர் மரவள்ளி பயிர் செய்ய முன்வருவார்கள் என, தெரிகிறது.

## மஞ்சள் பயிர் செழிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் பலத்த மழையில் மஞ்சள் பயிர்கள் செழிப்பாக வளர்ந்து விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கள்ளக்குறிச்சி பகுதியில் கோமுகி, மணிமுக்தா அணைகள் மற்றும் ஏரிகள் பாசனம் மற்றும் கிணற்று நீர் பானசம் மூலம் கரும்பு, நெல், மக்காசோளம் சாகுபடி செய்யப்பகிறது. கள்ளக் குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் மஞ்சள் சாகுபடி அதிகளவில் உள்ளது. இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பெய்த்ததால் அணைகள், ஏரிகளுக்கு குறைவாகவே தண்ணீர் வரத்து இருந்தது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து சாகுபடி செய்திருந்த பல ஆயிரம் ஏக்கர் கரும்பு, மக்காசோளம் பயிர் கள் காய்கியது. மஞ்சள் சாகுபடி செய்வதிலும் பாதிப்பு ஏற்பட்டது. பொங் கல் பண்டிகையொட்டி ஆகஸ்ட், நவம்பர் மாதங்களில் மஞ்சள் அதிகளவில் சாகுபடி செய்யப்படும். சில நாட்களாக பலத்த மழையால் ஏரி, கிணறுகளில் தண்ணீர் தேங்கி நின்றது. இதனைப் பயன்படுத்தி கிணற்று நீர் பாசனம் மூலம் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்திருந்தனர். தற்போது பெய்து வரும் பலத்த மழையில் மஞ்சள் பயிர்கள் செழிப்பாக வளர்ந் துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## தடுப்பணை நிரம்பியதால்வனத்துறையினர் மகிழ்ச்சி

சேலம் :வனத்துறை சார்பில், புதிதாக கட்டப்பட்ட அணைகள் மற்றும் தடுப்பணைகள் நிரம்பியதால், வனத்துறையினர் மகிழ்ச்சியடைந்தனர். சேலம், தெற்கு வனச்சரகம் சார்பில், காடுகளின் நீர் ஆதாரத்தை பாதுகாக்கும் விதமாகவும், வன விலங்குகளுக்கு தேவையான நீர் கிடைத்திடும் விதமாகவும், தேக்கம்பட்டி, குரும்பப்பட்டி வனப்பகுதியில், கசிவுநீர் குட்டைகள், தடுப்பணைகள் கட்டும் பணி, கடந்த மார்ச் மாதம் துவங்கியது.தேக்கம்பட்டி பகுதியில், இரண்டு தடுப்பணைகளும், ஒரு

கசிவு நீர் குட்டையும், குரும்பப்பட்டி பகுதியில் இரண்டு கசிவு நீர் குட்டைகளும், இரண்டு தடுப்பணைகளும் கட்டும் பணி, 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டத் துவங்கி, கடந்த ஆகஸ்ட் மாதம், பணி நிறைவடைந்தது.இந்நிலையில், சேலம் மற்றும் ஏற்காடு பகுதியில், 15 நாட்களாக, தொடர்ந்து பரவலாக மழை பெய்ததால், தடுப்பணைகள் நான்கும், கசிவுநீர் குட்டைகள் மூன்றும் நிரம்பி, உபரி நீர் வெளியேறி வருகிறது.தற்போது நிரம்பியுள்ள அணைகளால், கோடைகாலம் வரை, வனவிலங்குகளுக்கு தேவையான நீர் ஆதாரம் கிடைக்கும் என வனத்துறையினர் தெரிவித்தனர்.புதிதாக கட்டப்பட்ட அணைகளில், நீர் நிரம்பியதால், வனத்துறையினர், தேக்கம்பட்டி பகுதி கருங்காலி அணை அருகில் கிடா வெட்டி, சிறப்பு வழிபாடு நடத்தினர்.

## முட்டை விலை 315 காசாக நிர்ணயம்

நாமக்கல் :தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். இதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 307 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, எட்டு காசு அதிகரித்து, 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 342, பெங்களூரு, 335, மைசூர், 333, ஹைதராபாத், 319, மும்பை, 357, விஜயவாடா, 307, கோல்கத்தா, 345, பர்வாலா, 328, டில்லி, 343.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர்கள், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, ஒரு கிலோ, 63 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி

உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, ஒரு கிலோ 85 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

**<u>வரட்டுப்பள்ளம், குண்டேரிபள்ளம் அணை நிரம்பியது : பாசன விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

அந்தியூர் :ஈரோடு மாவட்டம் வரட்டுப்பள்ளம் மற்றும் குண்டேரிப்பள்ளம் அணை நிரம்பியதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.ஈரோடு மாவட்டத்தில், பவானிசாகர், குண்டேரிப்பள்ளம், வரட்டுப்பள்ளம் போன்ற அணைகள் உள்ளன. கடந்த மூன்றாண்டுக்கு மேலாக, இந்த அணைகள் மிகக்குறைந்த அளவு நீரோடும், வறண்டு காணப்பட்டது. கடந்த ஒரு மாதமாக பெய்த மழையால், பவானிசாகர் தவிர மற்ற அணைகள் நிரம்பின.அந்தியூர் அருகே மேற்கு தொடர்ச்சிமலை அடிவாரத்தில் வரட்டுப்பள்ளம் அணை அமைந்துள்ளது. பர்கூர் மலைப்பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழையால், 33.5 அடி கொள்ளளவு கொண்ட, இந்த அணையின் நீர் மட்டம், நேற்று முழு கொள்ளளவை எட்டியது.இந்த அணைக்கு காட்டாறு, மலை வழியாக, பல பாதையில் நீர் வருவதால், வரத்தை கணக்கிட இயலாது. நேற்று காலை, 8 மணி நிலவரப்படி, அணையில் இருந்து, வினாடிக்கு, 1,700 கனஅடி நீர் வெளியேறுகிறது. இதனால் கிருஷ்ணாபுரம், கொல்லபாளையம் ஆகிய ஏரிகளுக்கு நீர் வந்து கொண்டிருக்கிறது. இதுபற்றி விவசாயி இன்பசேகரன் கூறுகையில், ""இந்த அணை மூலம், 3,000 ஏக்கர் பாசனம் பெறும். கடந்த மூன்றாண்டாக, அணைக்கு நீர் வரத்து இல்லை. இந்தாண்டு நிறைந்ததால், நிலத்தடி நீர் மட்டம் உயரும்," என்றார்.* டி.என்.பாளையம் வனச்சரகத்துக்கு உட்பட்ட, கொங்கர்பாளையம் கிராமத்தில், குண்டேரிப்பள்ளம் அணை உள்ளது. குன்றி, விளாங்கோம்பை, கெம்பனூர், மல்லியம்துர்க்கம் பகுதியில் பெய்யும் மழை நீரால், நீராதாரம் பெறுகிறது.நேற்று அதிகாலை, 4 மணிக்கு,

அணைக்கு வினாடிக்கு, 8,000 கனஅடியும், 6 மணிக்கு, 4,000 கனஅடியும், 7 மணிக்கு, 2,500 கனஅடியும் நீர் வந்தது. அணையின் முழு கொள்ளளவான, 42 அடியை எட்டியது. உடன், மதகு மற்றும் தடுப்பணை மீது வழிந்து, வாணிப்புத்தூர் ஓடையில் வெள்ளமாக செல்கிறது. கள்ளிப்பட்டி, துறையம்பாளையம் அருகே, கிழக்குப்பள்ளம் தடுப்பணையும் நிரம்பியது. மேலும் பெருமுகை அருகே சஞ்சீவிராயன் குளம், கடந்த இரு நாட்கள் பொழித்த மழையால், நிரையும் தருவாயை நெருங்கி உள்ளது.இதனால், கொங்கர்பாளையம், வினோபா நகர், வாணிப்புத்தூர், கவுண்டம்பாளையம் உள்ளிட்ட கிராமங்களுக்கு, வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. "அணை சார்ந்த பகுதிகளில், தரைப்பள்ளத்தில் ஓடும் தண்ணீரை யாரும், கடந்து செல்ல வேண்டாம்' என, எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. குண்டேரிப்பள்ளம் அணையை சுற்றியுள்ள, மலை முகடுகளுக்கு நடுவே உள்ள, அருவி மற்றும் வீழ்ச்சிகளில், தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதை பார்க்க, கண்கொள்ளா காட்சியாக உள்ளது. பவானிசாகர் அணையின் மொத்த நீர் மட்ட உயரம், 120 அடியாகும். இதில், 15 அடி சகதி போக, 105 அடிக்கு தண்ணீர் தேக்கலாம். நேற்று மாலை, 4 மணி நிலவரப்படி, அணையில், 79.62 கனஅடி தண்ணீர் உள்ளது. அணைக்கு, 8,775 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்காலில், 1,100 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. பவானியில் நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

**<u>நெல் நாற்றில் வெளிர் தன்மைவேளாண் துறை யோசனை</u>**

வெள்ளகோவில் :வெள்ளகோவில் சுற்று பகுதியில், எல்.பி.பி., பாசன வசதி பெறும் வாய்க்கால் ஓரப்பகுதியில், தற்போது தொடர்ந்து பெய்து வரும் தொடர்மழையால், முத்தூர், சின்னமுத்தூர், மேட்டுப்பாளையம், ராசாத்தாவலசு, வள்ளியிரச்சல், ஊடையம், வேலம்பாளையம் உட்பட்ட பகுதிகளில், நெல் நடவு செய்யப்பட்டு, 20 நாட்கள் ஆகிறது.

இப்பகுதியில், 2,000 ஏக்கருக்கு மேல் நெற்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளது. மலை நீரால், தண்ணீர் தேங்குவதால், நாற்றில் நுண் ஊட்டச்சத்து பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. இத்தன்மையால், நாற்றில் வெளிர்தன்மை இருந்தால், இப்பயிர்களுக்கு நுண் ஊட்டச்சத்து பற்றாக்குறையை ஈடு செய்யும் பொருட்டு, ஒரு ஏக்கருக்கு, 22 கிலோ யூரியா, சிப்சம், 18 கிலோ, இவற்றுடன், நான்கு கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து, ஒரு இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். பின், வயலில் தண்ணீர் வடிந்தவுடன், வயலில் உரமிடும் முறை மூலம், உரமிட வேண்டும். ஒரு வாரம் முதல், பத்து நாட்களில், இப்பயிர் வெளிர் தன்மையில் இருந்து விடுபட்டு, நுண் ஊட்டச்சத்துடன் நன்கு வளரும்.இத்துடன் நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு, ஆங்காங்கே தென்படுகிறது. அதற்கு புரபனோபாஸ், 400 மில்லி லிட்டர், 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, ஒரு ஏக்கருக்கு கை தெளிப்பான் மூலம், தெளிக்க வேண்டும், என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>சத்தியில்அதிகப்பட்ச மழைபதிவு</u>**

ஈரோடு :சத்தியமங்கலத்தில், அதிகபட்ச மழையளவு பதிவாகி உள்ளது.ஈரோடு மாவட்டத்தில், சில தினங்களாக, பரவலாக மழை பெய்து வருகிறது. மழையால் பவானிசாகர் அணையில் இருந்து, 15ம் தேதி, பவானி ஆற்றில், தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டது. மேட்டூர் அணையிலும், 25ம் தேதி தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு விட்டது. இருப்பினும், பவானி மற்றும் காவிரி ஆற்றில், தற்போது மழை நீர் வெள்ளமாக பெருக்கெடுத்துள்ளது.நேற்று காலை நிலவரப்படி, சத்தியமங்கலத்தில் அதிகபட்சமாக, 51.4 மி.மீ., மழையளவு பதிவாகி உள்ளது. பவானிசாகரில்,31, கோபி,17.5, பவானி,25.4 மற்றும் கொடுமுடியில்,2 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.நேற்று முன்தினம் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் மழை பெய்யவில்லை.

சத்தியமங்கலம், பர்கூர், அந்தியூர் உட்பட வனப்பகுதியில் கடும் மழை பெய்துள்ளதால், ஆறு, வாய்க்கால்களில் செந்நிறமான நீர் செல்கிறது.

**திருச்சியில் 27 நாட்களில் 11.8. செ.மீ., மழை**

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் கடந்த, 27 நாளில், 11.8 செ.மீ., மழை பெய்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் கடந்த, 17ம் தேதி முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று காலையில் இருந்து திருச்சியில் வெயில் அடிக்க துவங்கியது திருச்சி மாவட்டத்தில் கடந்த, 27 நாட்களில் பல்வேறு பகுதியில், பெய்த மழை அளவு விபரம் (மி.மீ.,யில்) வருமாறு: லால்குடி, 163.60, மணப்பாறை, 126.30, முசிறி, 94.50, புள்ளம் பாடி, 156.80, தாத்தை யாங்கர் பேட்டை, 43.80, துறையூர், 57, திருச்சி டவுன் 111.40, மருங்காபுரி 132.80, பொன்னையாறு டேம், 197.20, நவலூர் குட்டப்பட்டு 150.60, நத்தையாறு, 159.60, கல்லக்குடி, 132.60, வாத்தலை அணைக்கட்டு, 105.80, சமயபுரம் 144, தேவி மங்களம், 121.80. சிறுகுடி, 152, புலிவலம், 67, கொப்பம்பட்டி, 135, தென் பரநாடு, 157, பொன் மலை 11 6.30, திருச்சி ஜங்ஷன், 111.20, உப்பர் அணை 30.80, துவாக்குடி 94 ஆகிய அளவுகளில் மழை பெய்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் கடந்த, 27 நாட்களில் மழை காரணமாக இரண்டு நாட்களுக்கு பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் சராசரியாக, 118 மி.மீ., மழை பெய்துள்ளது. இதனால், கிணறு மற்றும் ஆழ்குழாய்கள் மூலம் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள், சோமரசம் பேட்டை, ஜீயபு ரம், பெருகமணி, குடமுருட்டி உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி பணிகளை துவக்கியுள்ளனர். ÷ மலும், மானாவரி நிலங்களில், தொடர் மழை காரணமாக நிலக் கடலை, ஆமணக்கு உள்ளிட்ட எண்ணை வித்து பயிர்களை, சாகுபடி செய்ய முடியும் என, விவசாயிகள் நம்பிக்கையில் உள்ளனர்.

## மானாவாரி பருத்தி பயிரில் புரோடீனியா புழு தாக்குதல்

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை பகுதியில் பருத்தியில் புழு தாக்குதல் குறித்து வேளாண்மை அலுவலர்கள் ஆய்வு செய்தனர். பெரம்பலூர் மாவட்டத்தில், 36 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் வீரிய ஒட்டு ரக பருத்தி மானாவாரியாக பயிரிடப்பட்டு, தற்போது, காய் பிடிக்கும் தருவாயில் உள்ளது. இந்நிலையில், வேப்பந்தட்டை வட்டாரத்தில் பருத்தி செடியில் புழு தாக்குதல் ஏற்பட்டுள்ளதாக, வேளாண்மை அலுவலர்களுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, வேளாண்மை உதவி இயக்குநர் கீதா, பருத்தி ஆராய்ச்சி மைய தலைவர் பேராசிரியர் கவிமணி, வேளாண்மை அலுவலர் பிரேமா ஆகியோர் பருத்தி வயல்களில் ஏற்பட்டுள்ள நோய் தாக்குதல் குறித்து ஆய்வு செய்தனர். வேளாண்மை உதவி இயக்குநர் கீதா கூறியது: பருத்தி பயிரில் புரோடீனியா புழுக்களின் தாக்குதல் காணப்படுகிறது. இதன் தாக்குதல் அதிகமாவதற்குள் விவசாயிகள், பருத்தி வயல்களில் விளக்குப் பொறிகள் மற்றும் இனக்கவர்ச்சி பொறிகள் வைத்து, தாய் அந்து பூச்சிகளை கவர்ந்து இழுத்து அழிக்க வேண்டும். இலைகளில் உள்ள முட்டைகள், இளநிலை புழுக்களை வயலில் இருந்து சேகரித்து, அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும். மேலும், ஒரு ஏக்கருக்கு தயோடி கார்ப் 72 டபல்யூ பி 400 கிராம் அல்லது, குளோர்பைரிபாஸ் 20 இ.சி., 500 மில்லி அல்லது, குனைல் பாஸ் 25 இ.சி., 500 மில்லி இவற்றில், ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லி மருந்தை ஒட்டும் திரவத்துடன் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும், என்றார்.

## விவசாய பயிற்சி முகாம்

சாயல்குடி : சாயல்குடி அருகே எஸ். கீரந்தையில் விவசாய தொழில் பயிற்சி குறித்த முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் முருகன் துவக்கி வைத்தார். குழு உருவாக்குதல், மண் பரிசோதனை, விதை ரகத்தேர்வு, விதை நேர்த்தி, அடி உரம் குறித்து முகாமில் விளக்கப்பட்டது.

வட்டார தொழில் நுட்ப மேலாளர் ரெங்கநாதன், உதவி வேளாண்மை அலுவலர்கள் பழனிவேல், காதர்மைதீன் பேசினர். தொழில் நுட்ப வல்லுனர்கள் மாரீஸ்வரன், சந்திரகுரு நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்தனர்.

## வத்திராயிருப்பில் 38 மி.மீ.,மழை

விருதுநகர் : விருதுநகர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. போதுமான மழை இல்லாததால் அணைகள், கண்மாய்கள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு நீர்வரத்து குறைவாகவே உள்ளது. நேற்றுகாலை 8.30 மணிப்படி(மி.மீ.,) ஸ்ரீவி.,யில் 18, சிவகாசியில் 1.20, ராஜபாளையத்தில் 8.20, காரியாபட்டியில் 8.60, வத்திராயிருப்பில் 38, பிளவக்கல் அணையில் 15 மழை பதிவாகியிருந்தது. விருதுநகரில் நேற்று பகலில் மழையில்லை.

## குமரியில் தொடர் மழை

நாகர்கோவில்,: வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததால் குமரி மாவட்டத்தில் கடந்த 10 நாட்களாக பெய்த மழையால் குளங்கள் வேகமாக நிரம்பி வருகிறது.தொடர் மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள குளங்களும் வேகமாக நிரம்பி வருகிறது. மொத்தம் உள்ள 2040 குளங்களில் தற்போது வரை 1500 குளங்கள் முழுவதும் நிரம்பி உள்ளதாகவும், மீதி குளங்களும் விரைவில் நிரம்பும் தருவாயில் இருப்பதாகவும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 39.25 அடியாக இருந்தது. வினாடிக்கு 362 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. பெருஞ்சாணி அணை 68.20 அடியாக இருந்தது. வினாடிக்கு 596 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 350 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.சிற்றாறு1-16.37, சிற்றாறு2 -16.47, பொய்கை-8.10, மாம்பழத்துறையாறு-52.52 அடியாக இருந்தது. சிற்றாறு1 அணைக்கு வினாடிக்கு 151 கன அடி நீர் வருகிறது. 200 கனஅடி நீர்

வெளியேற்றப்படுகிறது. மாம்பழத்துறையாறு அணைக்கு 10 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

காவிரி தண்ணீருக்காக கர்நாடகத்தையும், முல்லைப் பெரியாறுக்காக கேரளாவையும், பாலாறுககாக ஆந்திரத்தையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் பெய்யும் மழை நீரை சேமித்தாலே பிரச்னையின் பெரும் பகுதியை சமாளித்துவிடலாம். தண்ணீர் பிரச்னை தொடர்பான வழக்குகளுக்கு செலவிடும் பணத்தில் ஒருபகுதியை நதி நீர் இணைப்புக்கும், வீணாக கடலுக்கு செல்லும் தண்ணீரை சேமிக்கவும் பயனபடுத்தி இருந்தால் இன்று தென் மாவட்டங்கள் சோலையாகவும், தென் மாவட்டங்களின் நெற்களஞ்சியமாக நெல்லையும் திகழ்ந்திருக்கும். பொதிகை மலையில் உற்பத்தியாகி நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்கள் வழியாக 130 கி.மீ., தூரத்திற்கு ஓடி புன்னக்காயல் வழியாக வங்கக் கடலில் கலக்கிறது தாமிரபரணி. தென் மாவட்டங்களில் குறிப்பாக நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களின் குடிநீர் தேவை, விவசாய தேவையை பூர்த்தி செய்வது தாமிரபரணி ஆறு. மழை நீரில் 40 சதவீதம் கடலுக்கு செல்வதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. தாமிரபரண¤ ஆற்றில் இருந்து ஆண்டுக்கு சராசரியாக 15 டிஎம்சி முதல் 20 டிஎம்சி தண்ணீர் வீணாக கடலுக்கு செல்கிறது. 1 டிஎம்சி என்பது 11 ஆயிரம் கன அடி தண்ணீர் ஒரு நாள் முழுவதும் செல்வதாகும். தாமிரபரணியால் நெல்லை மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 46 ஆயிரத்து 107 ஏக்கர் நிலங்களும் பாசனம் பெறுகினறன. நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் என மூன்று மாவட்டங்களின் குடிநீர் தேவைக்கும் ஜீவாதாரம் தாமிரபரணி. வடக்கு

கோடை மேலழகியான் கால்வாய், தெற்கு கோடை மேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், நெல்லை கால்வாய், பாளையங்கால், மருதூர் மேலக்கால், மருதூர் கீழக்கால், ஸ்ரீவைகுண்டம் வடகால், ஸ்ரீவைகுண்டம் தென்கால் என 11 சிறிய அணைக்கட்டுகள், கால்வாய்கள் வழியாகத் தான் வங்கக் கடலுக்கு செல்கிறது. தாமிரபரணியின் கடைசி அணைக்கட்டு தான் ஸ்ரீவைகுண்டம். 8 அடி உயரமே உடைய இந்த அணைக்கட்டில் இன்று 6 முதல¢ 7 அடிக்கு சேறும், சகதியும் தேங்கியிருக்கிறது. சிறிய மழை விழுந்தால் கூட அணை மறுகால் பாய்ந்து உபரி நீர் முழுவதும் வெளியேறி விடும். இதற்கு கீழ் உள்ள 53 குளங்களின் நிலையும் இதே கதி தான். இந்த அணையையும் இதற்கு உட்பட்ட குளங்களையும் தூர் வாரி ஆண்டு முழுவதும் வீணாகச் செல்லும் மழை நீரை தேக்க உருப்படியான எந்த நடவடிக்கையும் இதுவரை இல்லை. விளைவு ஆண்டு தோறும் 20 டிஎம்சி தண்ணீர் வீண். ஆத்தூர் அருகே தடுப்பணை அமைத்தால் குடிநீர் திட்டங்களுக்கு அங்கிருந்தே தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்ற விவசாயிகளின் யோசனையையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. வீணாக செல்லும் கடல் நீரை திசையன்விளை, சாத்தான்குளம் பகுதிக்கு கொண்டு செல்வதற்காக நாட்டிற்கே முன்னோடியாக ரூ.369 கோடியில் தீட்டப்பட்ட தாமிரபரணி - நம்பியாறு - கருமேனியாறு ஆகிய மூன்று ஆறுகளின் நதிநீர் இணைப்பு திட்டமும் ஆட்சியாளர்களின் ஆதரவின்றி பாதியில் நிற்கிறது. 1992ம் ஆண்டு ஏற்பட்ட புயல், வெள்ளத்தின் போது மட்டுமே வீணாக கடலுக்கு வெளியேறிய தண்ணீர் 120 டிஎம்சி என்பது நெஞ்சையே பதைபதைக்க வைக்கிறது. அவ்வளவு தண்ணீரையும் கடலுக்கு அனுப்பி விடுவதால் முன் கார், கார், பிசானம் என ஆண்டுக்கு மூன்று போக விவசாயம் செய்த நெல்லையும், தூத்துக்குடியும் இன¢று ஒரு போக

விவசாயத்திற்கே திண்டாடுகிறது. போதாக்குறைக்கு ஆற்றிலேயே வளர்ந்து மிதக்கும் அமலைச்செடிகள் வேறு தண்ணீரை மாசாக்கி வருகின்றன. ஆற்றை சுத்தமாக்கி கழிவு நீர் கலக்காமல், அணையையும் தூர் வாரி ஆழப்படுத்தினாலே தண்ணீரை தேக்கி விடலாம். கையிலே வெண்ணையை வைத்துக் கொண்டு ஊரில் ஏன் கை ஏந்த வேண்டும். இதை அரசும், ஆட்சியாளர்களும் உணர்ந்தால் விவசாயிகள் வாழ்வில் ஒளி பிறக்கும். மாநிலமும் செழிக்கும்.

## குளிர்காலம் துவங்கியதால் முட்டை விலை உயர்வு



நாமக்கல்: குளிர்காலம் துவங்கியதை அடுத்து, நாமக்கல்லில் முட்டை விலை உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு ஆலோசித்தனர். குளிர்காலம் துவங்கியுள்ளதால் முட்டையின் நுகர்வு தமிழகம் மற்றும் கேரளாவில் அதிகரித்துள்ளது. இதனால் விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து முட்டை விலையில் 8 காசுகள் உயர்த்தப்பட்டு, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 315 காசாக நிர்ணயிக்கப்பட்டது. வரும் வாரங்களில் முட்டை விலை தொடர்ந்து உயரும் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## காய்கறி விலை உயர்வு இஞ்சி கிலோ 200 ரூபாய்

கள்ளக்குறிச்சி, : தமிழகத்தில் கடந்த சில வாரங்களில் பெய்த பருவ மழையால் அணைகள், நீர்நிலைகள், ஏரி, குளங்கள் நிரம்பி வருகிறது. இதன் காரணமாக காய்கறிகளின் விலை குறையும் என பொதுமக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் மழை பெய்தும் கள்ளக்குறிச்சி காய்கறி

விற்பனை நிலையத்தில் ஒரு கிலோ தக்காளி ரூ.15க்கும், கத்திரிக்காய் ரூ.20க்கும், வெண்டைக்காய் ரூ.16க்கும், பச்சை மிளகாய் ரூ.20க்கும், முள்ளங்கி ரூ.16க்கும், கொத்தவரங்காய் ரூ.24க்கும் கடந்த 10 தினங்கள் முன்பு விற்பனையானது. தற்போது ஒரு கிலோ தக்காளி ரூ.30க்கும், கத்திரிகாய் ரூ.40க்கும், வெண்டைக்காய் ரூ.32க்கும், பச்சைமிளகாய் ரூ.50க்கும், புடலங்காய் ரூ.32க்கும், பீர்க்கங்காய் ரூ.50க்கும், பீன்ஸ் ரூ.70க்கும், கேரட் ரூ.60க்கும், சவ்சவ் ரூ.40க்கும், உருளை ரூ.60க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலோ இஞ்சி ரூ.50ல் இருந்து ரூ.200ஆக உயர்ந்துள்ளது. மழை பெய்தால் காய்கறிகளின் விலை குறையும் என பொதுமக்களின் எதிர்பார்ப்பு பொய்த்து போனது. நெல் பயிரில் புகையான் பூச்சியை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம் பால் பிடிப்பதற்கும் முன்பே பதராகும் அபாயம் வேளாண் உதவி இயக்குநர் விளக்கம்

கிருஷ்ணகிரி, : நெல் பயிரை தாக்கும் புகையான் பூச்சியை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம் குறித்து காவேரிப்பட்டணம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன் விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் வட்டாரத்தில் கார் மற்றும் சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பல்வேறு வளர்ச்சி நிலைக ளில் உள்ளது. இதில் ஐ.ஆர் -64, பிபிடி மற்றும் ஜலகர பொன்னி ரகங்களில் புகையான் பூச்சி தாக்குதல் பரவலாக உள்ளது. இந்த தாக்குதலால் வயல்களில் வட்ட வட்டமாக பயிர்கள் தீயினாற் காய்ந்தது போல காணப்படும். இலைகள் மஞ்சள் நிறமாக மாறி காய்ந்துவிடும். நெல் பயிரின் தண்டு உடைந்து சாய்ந்துவிடும். மகசூல் முற்றிலும் பாதிக்கப்படும். தண்டு பகுதி துர்நாற்றம் வீசும். இந்த வகையான வளர்ந்த புகை யான் பூச்சிகள் பழுப்பு அல் லது சாம்பல் நிறத்தில் நெல் பயிரின் தண்டுப்பகுதியின் அடியில் நீர்பகுதிக்கு சற்று மேலே இருந்து கொண்டு தண்டினுள் உள்ள சாற்றை உறிஞ்சி எடுக்கும். இதனால் தண்டுப்பகுதி செயலிழந்து மடிந்து பயிர்கள் சாய்ந்துவிடும். தண்ணீர் தேங்கியுள்ள வயல்களிலும், தழைச்சத்து அதிகம்

இட்ட வயல்களிலும் இவ்வகை பூச்சிகள் அதிகமாக காணப்படும். பால் பிடிப்பதற்கும் முன்பே பயிர் காய்ந்து பதராகிவிடும். எனவே, பூச்சி கட்டுப்பாடு முறைகளை கையாள்வது அவசியமாகும். இந்த புகையான் பூச்சி யை கட்டுப்படுத்த, அதிக மான தழைச்சத்து இடுவ தை தவிர்க்க வேண்டும். மேலுரமாக யூரியாவை 3-4 முறை பிரித்து இட வேண்டும். நீர் மறைய நீர் பாய்ச்ச வேண்டும். நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாத்தல் வேண்டும். வயலில் உள்ள தண்ணீரை சுத்தமாக வடித்துவிட்டு, வேர்களில் நன்குபடும்படி, பூப்பதற்கு முன்பு 5 சதவீத வேப்பங்கொட்டை கரைசல், இமி டா குளோப்ரிட 200எஸ்எல் 50 மில்லி, இமிடா குளோ ப்ரிட் 17.8எஸ்எல் 100 மில்லி, தயோ குளோப்ரிட் 240 எஸ்சி 200 மில்லி, தயோமிதாக்சாம் 25 டப ள்யு.ஜி 40 மில்லி, குளோ ரான்ட்ரேனிலிங்ரோல் 18.5 சதவீதம் எஸ்.சி 60 மில்லி இதில் ஏதேனும் ஒரு மருந்தினை ஒன்றை கைத்தெளிப்பான் கொண்டு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூத்த பின்பு, நீரை வடிகட்டிவிட்டு ஏக்கருக்கு 10 கிலோ கார்பரில் 10 சதத் தூளை பயிரின் அடிப்பகுதியில் படும்படி தூவ வே ண்டும். புகையானுக்கு எதிர்ப்பு சக்தி உருவாக்கும் பூச்சி மருந்துகளான செய ற்கை பைரிதராய்டுகள், மீதைல் பாரத்தியான், குயினால்பாஸ் போன்ற மருந்துகள் உபயோகப்படுத்துவதை தவிர்த்து நெல் பயிரில் புகையான் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்திட வேண்டும். இவ் வாறு தனது அறிக்கையில் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## ரேலியா அணை நிரம்பி வழிகிறது

குன்னூர், : இரண்டு ஆண்டுக்கு பின்ரேலியா அணை நிரம்பிவழிவ தால்,குன்னூர் நகர மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 2 ஆண் டாக எதிர்பார்த்த அளவு வடகிழக்கு பருவமழை பெய்யாததால், நகரில் உள்ள முக்கிய

நீராதாரங்கள் வறண்டு கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட் டது. நகராட்சி நிர்வாகம் சார்பில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டது. வன ஓடைகளில் இருந்து தனி நபர்கள் சுகாதாரமற்ற தண்ணீரை எடுத்து வந்து ஒரு குடம் ரூ.10க்கு விற்றனர். இந்நிலையில், கடந்த ஒரு மாதமாக மழை பெய்து வருவதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நகரின் முக்கிய நீராதாரமாக விளங்கிவரும்ரேலியா அணையும் கடந்த ஆண்டு ரூ.5 லட்சம் செலவில் தூர்வாரப்பட்டது. அதன்பின்இந்த அணை முற்றிலும் வறண்டது.தற்போது, பெய்து வரும் மழையால் பந்துமி, உப்புதொட்டி, கரடிப்பள்ளம், கரன்சி, ஹை பீல்டு, ஜிம்கானா ஆகிய நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிகின்றன.2 ஆண்டுகளுக்குப்பின் ரேலியா அணை முழு கொள்ளள வான 43.6 அடிக்கு நிரம்பி வழிகிறது. இதையடுத்து,அணை அருகே உள்ள முனீஸ்வரர் கோயிலில் நகராட்சி சார் பில் நேற்று சிறப்பு பூஜை நடத்தப்பட்டது. இனி, பற்றாக்குறையின்றி அனை வருக்கும் குடிநீர் வழங்கப்படும். புதிய தடுப்ப ணைகளும் கட்ட திட்டமிடப் பட்டுள்ளதாக நகராட் சித் தலைவர் சரவணக்குமார் தெரிவித்தார். இதில் நகராட்சித் தலைவர் சரவணகுமார், ஆணையர் ஜான்சன், துணைத் தலைவர் மணி, கவுன்சிலர்கள் சத்தார், முபாரக், கோபி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

## <u>தவணை காலத்திற்கு முன்பாக பயிர்கடனை செலுத்தினால் வட்டி தள்ளுபடி</u>

ஈரோடு, : கோபிசெட்டிபாளையத்தை அடுத்துள்ள புதுக்கரைபுதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் உறுப்பினர்கள் கல்வி திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கு புதுக்கரை புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் கந்த சாமி தலைமை தாங்கினார். ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் தெய்வநாயகம் முன்னிலை வகித்தார். முகாமில் கலந்து கொ ண்ட மாவட்ட கூட்டு றவு ஒன்றிய மேலா ண்மை

இயக்குநர் சோமகாந்தன் பேசியதாவது, தமிழக அரசின் புத்துயிரூட்டும் திட்டத்தின் கீழ் புதுக்கரைபுதூர் தொடக்க வேளா ண்மை கூட்டுறவு கடன் சங்கமானது உறுப்பினர் கள் கடன் நிலுவையாக ரூ.2.32 கோடி வைத்துள் ளது. நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பயிர்கடன்களை தவணை தேதிக்கு முன்பாக திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி வசூலிப்பதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அந்த வட்டி இழப்பினை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளும். எனவே இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். முகா மில் தொடக்க வேளா ண்மை கூட்டுறவு கடன் சங்க துணை தலை வர் பழனிச்சாமி, கோபி செட்டிபாளையம் கள அலுவலர் விஜய்கணேஷ், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய பிரசார அலுவலர் வெங்கட்ராமன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தொட்டியத்தில் துவரை நாற்று செயல்விளக்க திடல் துணை வேளாண் இயக்குநர் ஆய்வு

தொட்டியம்,: தொட்டியம் வட்டாரம் வேளாண்மைத்துறை, வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் கீழ் தொட்டியத்தில் துவரை நாற்று செயல் விளக்கத்திடல் அமைக்கப் பட்டுள்ளது. விஜயகுமார் மற்றும் மணி ஆகிய விவசாயிகளின் வயலில் அமைக்கப்பட்டுள்ள இத்திடலை மாவட்ட துணை வேளாண்மை இயக்குநர் உழவர் பயிற்சி நிலையம் சந்திரசேனன் நாயர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது துவரையில் அதிக மகசூல் எடுப்பது குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.அவடன் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜாமணி, வேளாண்மை அலுவலர்கள் உழவர் பயிற்சி நிலையம் கலைராணி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகுந்தா, வட்டார தொழில்நுட்ப வல்லுனர்கள் யுவராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

**குழுமணியில் கால்நடை பராமரிப்பு துறை ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலகம் திறப்பு அமைச்சர்,கொறடா பங்கேற்பு**

ஜீயபுரம்,: கால்நடை பராமரிப்பு துறை ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலகம் குழு மணியில் நேற்று திறக்கப் பட்டது. திருச்சி மாவட்டத்தில் கால்நடைத்துறைக்கு திருச்சி, முசிறி, லால்குடி என 3 கோட்டங்கள் ஏற்க னவே செயல்பட்டு வருகின் றன. தற்போது திருச்சி கோட்டத்திலிருந்து ஸ்ரீரங் கத்தை தலைமையிட மாக கொண்டு புதிதாக ஸ்ரீரங்கம் கோட்டம் ஏற்படுத்தப்பட் டுள்ளது. இதில் அந்தநல் லூர், மணிகண்டம், மணப் பாறை, வையம்பட்டி, மருங் காபுரி உள்ளிட்ட ஒன்றி யங் கள் அடங்கும். இதில் 27 கால் நடை மருந்தகம், 6 கால் நடை கிளை நிலையங் கள் உள்ளன. இந்நிலையில் தற்போது ஏற்படுத்தப்பட் டுள்ள புதிய ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலகத்தின் மூலம் அரசின் நலத்திட்ட உதவிகள் விரைவில் மக் களை சென்றடையவும், இலவச கறவை மாடுகள், ஆடுகள், நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டம், தீவன அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக அமையும். இதற்கான தற் காலிக புதிய அலுவலக திறப்பு விழா குழுமணி கால்நடை மருந்தக வளாகத் தில் நடந் தது. கொறடா மனோகரன் தலைமை வகித்தார். கலெக்டர் ஜெயஸ்ரீ முன்னிலை வகித் தார். கதர் மற்றும் தொழில் துறை அமைச்சர் பூனாட்சி புதிய அலுவலக பெயர் பலகையை திறந்து வைத் தார். இதில் மாவட்ட கால் நடை இணை இயக்கு னர் மோகனரங்கன், உதவி இயக்குனர்கள் சுந்தர் ராஜன், ராஜமாணிக் கம், ஆவின் தலைவர் அயிலை பழனியாண்டி, ஒன்றியக் குழு தலைவர் அழகேசன், ஊராட்சி தலைவர்கள் குழு மணி உஷாநந்தினி கல் யாண சுந்தரம்,பேரூர் வீர முத்து, மாவட்ட மற்றும் ஒன்றிய கவுன்சிலர்கள், வட் டார கால்நடை மருந்தக மருத் துவர்கள், பணி யாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.பணியிடங்கள் ஒதுக்கீடு விழாவில் அமைச்சர் பூனாட்சி பேசும்போது, இந்த

அலுவலகத்திற்கு ஒரு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர், ஒரு மேலாளர், 3 உதவியாளர்கள், ஒரு தட்டச்சர், ஒரு ஊர்தி ஓட்டுநர், ஒரு அலுவலக உதவியாளர் மற்றும் ஒரு இரவு காவலர் ஆகிய பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கம் கோட்ட கால்நடை பராமரிப்பு சேவை பகுதிகளில் மட்டும் கடந்த 3ஆண்டுகளில் ரூ.1 கோடியே 80 லட்சம் மதிப்பில் 506 விலையில்லா கறவை பசுக்களும், ரூ.4 கோடியே 50 லட்சம் மதிப்பில் 3471 பயனாளிகளுக்கு 13,884 விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

**<u>மயிலாடுதுறையில் பண்ணைக்குட்டையில் மீன்வளர்ப்பு பயிற்சி பெயர்கள் பதிவு செய்ய அழைப்பு</u>**

நாகை, : மயிலாடுதுறையில் வருகிற 29ம்தேதி துவங்கவுள்ள பண்ணைக்குட்டையில் மீன் வளர்ப்பு பயிற்சியில் சேர விருப்பமுடையவர்கள் பெயர்களை பதிவு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாகை மீன்வள தொழில்நுட்ப நிலையம், ஹைதராபாத் தேசிய மீன்வள மேம்பாட்டு கழக நிதியுதவியுடன், பண்ணைக் குட்டையில் மீன்வளர்ப்பு பயிற்சி மயிலாடுதுறை அடுத்த காளி கிராமத்தில் உள்ள மதியழகன் மீன்பண்ணையில் வருகிற 29ந்தேதி முதல் 31ந்தேதி வரை நடைபெற உள்ளது. மயிலாடுதுறை மற்றும் அதனை சுற்றி உள்ள கிராமங்களை சேர்ந்தவர்கள், இதுவரை இப்பயிற்சியில் கலந்து கொள்ளாதவர்கள் தங்கள் பெயரை நாகை முதலாவது கடற்கரை சாலையில் செயல்பட்டு வரும் மீன்வள தொழில் நுட்ப நிலையத்தில் நேரிலோ அல்லது 9443784479 மற்றும் 04365 240441, 240442 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டோ அல்லது மதியழகன் மீன் பண்ணை, வெள்ளாளத்தெரு, கண்ணியாநத்தம், மயிலாடுதுறை தாலுகா என்ற முகவரியில் நேரிலோ அல்லது 9786741586 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டோ பதிவு செய்து கொள்ளலாம். இப்பயிற்சியில் கலந்து கொள்வதற்கான தகுதியாக பயிற்சியாளர்கள் ஒவ்வொருவரும் தனியாக பண்ணைக்குட்டை அமைத்திருக்க வேண்டும். பயிற்சியில் மீன்வளர்ப்பின் பல்வேறு

தொழில்நுட்பங்கள் நேரடி செயல் விளக்கம் நடைபெறும். 3 நாள் இலவச பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு ஊக்கத்தொகையும், பண்ணைக் குட்டையில் மீன் வளர்ப்பு பற்றிய கையேடு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்பவர்கள் பண்ணைக்குட்டை அமைத்ததற்கான ஏதாவது ஒரு ஆதார நகலை கொண்டு வர வேண்டும். இவ்வாறு நாகை மீன்வள தொழில்நுட்ப நிலைய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழையில் பாதித்த தாளடி பயிர்களுக்கு உரமிடும் பணி

நீடாமங்கலம், : திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை கோட்டத்தில் மின் மோட்டாரை பயன்படுத்தி நடப்பட்ட 4,425 எக்டர் தாளடி நடவு முடிவடைந்துள்ளது. பின்தங்கிய தாளடி நடவு பணிகள் மும்முரமாக நடை பெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பொய்த்த வடகிழக்கு பருவமழை இந்தாண்டு தீவிரமடைந்து பெய்து வருகிறது. இதனால் மழைநீரில் மூழ்கிய தாளடி நெல் பயிர்கள் மூழகியது. எனவே தண்ணீரை வடியவைத்து பயிர்களை பூச்சிகள் தாக்காத வகையில் வேளாண்மைதுறை அறிவுரையின்படி மழை இல்லாத நேரத்தில் நீடாமங்கலம் பகுதியில் பூவனூர், ஆதனூர் தட்டி, காளாச்சேரி, மேலபூவனூர், சித்தமல்லி, பெரம்பூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உரம் இடும் பணியை தொடங்கியுள்ளனர்.

## சிறு நீர்பாசனம் கணக்கெடுப்பு

சாத்தான்குளம், :சாத்தான்குளம் வட்டத் தில் சிறு நீர்பாசனம் குறித்து கணக்கெடுப்பு தொடங்கப்பட்டது. 5ஆண்டுகளுக்கு ஒரு முறை வட்டத்தில் சிறு நீர்பாசனம் குறித்து கணக்கெடுக்கப்பட்டு அதன் விபரம் அரசுக்கு சமர்பிக்கப்படும். அதன்படி சிறு நீர்பாசனம் குறித்த கணக்கெடுப்பு பணி சாத்தான் குளம் வட்டம் நெடுங்குளத்தில் தொடங்கப் பட்டது. இப்பணியை சாத்தான்குளம் தாசில் தார் மிகாவேல் ஞானதீபம் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். இதில் கிராமத்தில் உள்ள குளம்,

கிணறுகளின் நீர்மட்டம் அளவு, அதில் பாசனம் நடைபெறும் அளவு குறித்து கணக்கெடுக்கப்பட்டது. மண்டல துணை தாசில்தார் ரதி கலா, புள்ளியியல் ஆய் வாளர் பேச்சித்தாய், கிராம நிர்வாக அலுவலர் கள் மணிகண்டன், செந்தில்குமார், சிவகாமி, கிராம உதவியாளர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## <u>கொட்டி தீர்த்த மழை ஒரே நாளில் 187.1 மி.மீ பதிவு</u>

சேலம், : சேலம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. ஒரே நாளில் 187.1 மி.மீட்டர் மழையளவு பதிவாகியுள்ளது. வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்து உள்ளதால், தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் திடீரென வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன. இதை தொடர்ந்து இரண்டு மணிநேரம் இடைவிடாமல் மழை கொட்டி தீர்த்தது. மழையால் நகரின் தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்தது. இதனால் மழைநீர் சாலையில் பெருக்கெடுத்து ஓடியதால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். ஏற்காடு, தம்மம்பட்டி, ஓமலூர், மேட்டூர், ஆத்தூர் ஆகிய பகுதிகளிலும் மழை பெய்தது. இந்த மழையால், மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் தணிந்து, குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவியது. மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் 187.1 மி.மீட்டர் மழையளவு பதிவானது. அதிகபட்சமாக தம்மம்பட்டியில் 61 மிமீ மழை பெய்துள்ளது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்த மழையளவு விபரம் (மி.மீட்டரில்): தம்மம்பட்டி- 61.1., சேலம்- 37.2., ஆத்தூர்- 26.6., வாழப்பாடி-25.4., கெங்கவல்லி- 16.1., சங்ககிரி-6., வீரகனூர்- 4.1., ஏற்காடு-3.8., ஓமலூர்-3.2., இடைப்பாடி-2., மேட்டூர்-1.6.,

**நீர்பிடிப்பு பகுதியில் தொடர்மழை அமராவதி அணை நீர்மட்டம் 4 நாளில் 14 அடி உயர்ந்தது**

உடுமலை,: நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக அமராவதி அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. 4 நாளில் 14 அடி நீர் நிரம்பியது. திருப்பூர் மாவட்டம் உடுமலை,மடத்துக்குளம் வட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்மழை பெய்து வருகிறது. இதனால் அருகில் உள்ள அமராவதி அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கடந்த மாதம் அணையின் நீர்மட்டம் 80 அடியாக இருந்தது.அப்போது பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென குறைந்தது. கடந்த மாதம் 19ம் தேதி நீர்மட்டம் 65 அடியாக இருந்தது. இந்நிலையில், தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கி உள்ளதால் உடுமலை,மடத்துக்குளம் வட்டார பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. அமராவதி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் கனமழை கொட்டி வருகிறது. இதனால் பாம்பாறு, சின்னாறு, கூட்டாறு,தேனாறு ஆகியவற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது. இந்த வெள்ளம் தூவானம் வழியாக அமராவதி அணை வந்து சேருகிறது. இதன்காரணமாக அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கடந்த 4 நாட்களில் 14 அடி உயர்ந்து நேற்று காலையில் அணையின் நீர்மட்டம் 79.31 அடியாக உயர்ந்தது. இதன் காரணமாக பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அமராவதி அணையால் திருப்பூர்,கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. அணையின் மொத்த உயரம் -90அடி தற்போதைய நீர்மட்டம் -79.31அடி வரத்து -2730. மழை பெய்யத் துவங்கியதில் இருந்து அணையில் இருந்து தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. மழை நீடித்தால் இன்னும் சில நாட்களில் அணை நிரம்பி வழியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அரவக்குறிச்சியில் கனமழைக்கு குளங்கள் நிரம்பின விவசாயிகள் மகிழ்ச்சி

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி ஒன்றியத்தில் புங்கப்பாடி மேல் பாகம், வெஞ்மாங்கூடலூர் மேல்பாகம், நாகம்பள்ளி, ஈசநத்தம், புங்கப்பாடி கீழ் பாகம், அம்மாபட்டி, ஆலமரத்துப்பட்டி, சேந்தமங்கலம் கீழ்பாகம், மேல்பாகம், சாந்தப்பாடி, கோவிலூர், வெஞ்மாங்கூடலூர் கீழ்பாகம் உள்ளிட்ட 20 ஊராட்சிகள் உள்ளது. இங்கு விவசாயம் மற்றும் ஆடு, மாடு உள் ளிட்ட கால்நடைகள் வளர் ப்பு பிரதான தொழிலாக உள்ளது. அரவக்குறிச்சி பகுதி வானம் பார்த்த பூமி யாக உள்ளது. இதனால் மழையை நம்பி மட்டுமே விவசாயிகள் உள்ளனர். இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக பள்ளபட்டி மற்றும் அரவக்குறிச்சி ஒன்றியத்திலுள்ள 20 ஊராட்சி பகுதிகளில் கனமழை பெய்தது. அரவக்குறிச்சி ஒன்றியத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் அமைக்கப்பட்ட குளம், குட்டைகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது. இதனால் அந்தந்த பகுதியிலுள்ள வீடுகளில் உள்ள கிணறு, விவசாய கிணறுகள், ஆழ் குழாய் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கு மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயக் கிணறுகளில் நீர் மட்டம் உயர் ந்து வருவதால் தற்பொழுது விவசாயிகள் பயிரிடும் கம்பு, சோளம், மிளகாய், பருத்தி, கடலை, முறுங்கை உள் ளிட்ட பயிர்களுக்கும், கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகள் தீவண புட்களுக்கும் இந்த தண்ணீர் பயனுள்ளதாக இருக்கும் என்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## சம்பா நெற்பயிருக்கு தற்போது அவசியம் மேலுரம் இட வேண்டும் வேளாண் அதிகாரிகள் தகவல்

அன்னவாசல், : புதுக்கோட்டை மாவட்டத் தில் சம்பா சாகுபடி செய் துள்ள விவசாயிகள் த ற்போது பெய்துவரும் மழையைப் பயன்படுத்தி மேலுரம் அவசியம் இடவேண்டும் என்று வேளாண் இணை இயக்குநர்

ஷாஜஹான், குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் தகவல் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூட்டாக வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்குப் பருவமழை பெய்துவருகிறது. அறந்தாங்கி, ஆவுடையார் கோயில், மணமேல்குடி மற்றும் ஏம்பல் பகுதிகளில் நேரடி நெல்விதைப்பு மூலம் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பிற பகுதிகளில் தண்ணீர் வசதியுள்ள இடங்களில் நெல் நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தற்போது பெய்துவரும் மழையின் ஈரத்தைப் பயன்படுத்தி மேலுரம் இடவேண்டியது அவசியமாகும். சம்பா நெற்பயிருக்கு மேலுரமாக ஒரு ஏக்கருக்கு 33 கிலோ யூரியா மற்றும் 18 கிலோ ஜிப்சம், 6 கிலோ நன்கு தூள் செய்யப்பட்ட வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றைக் கலந்து ஓர் இரவு வைத்திருந்து மறுநாள் இடவேண்டும். வேப்பம்பிண்ணாக்கு கலந்து யூரியா இடுவதால் யூரியா வீணாவது தடுக்கப்படுகிறது. ஜிப்சம் இடுவதால் மண் இறுக்கம் குறைந்து மண் பொலபொலப்பாவதுடன் சுண்ணாம்புச் சத்தும் பயிருக்குக் கிடைக்கிறது. நெல்லுக்கு நுண்ணூட்டம் இடுதல்: தற்போது தொடர்ந்து மழை பெய்துவருவதால் பயிரில் நுண்ணூட்டச்சத்துகளின் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை நிவர்த்தி செய்திட ஏக்கர் ஒன்றுக்கு 5 கிலோ நெல் நுண்ணூட்டக் கலவையை 20 கிலோ மணலுடன் கலந்து சீராகத் தூவவேண்டும். இதனால் பயிருக்குத் தேவையான நுண்சத்துகள் கிடைப்பதால் பயிர் நன்கு செழித்து வளரும். நேரடி நெல் விதைப்பு செய்துள்ள விவசாயிகள் தற்போது பெய்துவரும் மழை ஈரத்தினைப் பயன்படுத்தி பயிரைக் கலைத்துவிட வேண்டும். மேலும் பயிர் இல்லாத இடங்களில் பயிர் வைத்து நிரப்பவேண்டும். களை முளைத்தபின் தெளிக்கும் களைக்கொல்லியை இம்மழையின் ஈரத்தைப் பயன்படுத்தி தெளிக்கலாம் என்றனர்.மானியத்தில் ஜிப்சம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும்

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நெல் நுண்ணூட்டக் கலவை மற்றும் ஜிப்சம் 50% மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. இதனை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மாவட்டத்தில் 2 செமீ மழை பொழிவு**

நாமக்கல், நாமக்கல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 2 செமீ மழை பெய்தது. வடகிழக்கு பருவ மழை தொடங்கியது முதல், நாமக்கல் மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்துள்ளது. நாமக்கல் நகரில் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு பெய்ய தொடங்கிய மழை இரவு 7 மணி வரை நீடித்தது. இதனால் நகரின் பல இடங்களில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியது. நேற்று காலை 6 மணி வரை மாவட்டத்தின் பல பகுதிகளில் பெய்த மழை அளவு விபரம் (மில்லிமீட்டரில்): நாமக்கல்-65 மி.மீ, பரமத்திவேலூர்-27, ராசிபுரம்-8, சேந்தமங்கலம்-51, திருச்செங்கோடு-28, எருமப் பட்டி-25, மங்கள புரம்-10, புதுச்சத்திரம்-2, குமாரபாளையம்-5, மோ கனூர்-15 மில்லிமீட்டர்.

**வானிலை மையம் தகவல் 4 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு**

நாமக்கல், : நாமக்கல் மாவட்டத்தில் 4 நாட்களு க்கு 7 மி.மீ முதல் 15 மி.மீ வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இது குறித்து நாமக்கல் கால்நடை வா னிலை ஆலோசனை மை யம் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் மாவட்டத்தில் வரும் 4 நாட்களுக்கு, பல்வேறு இடங்களில் 7 மி.மீ முதல் 15 மி.மீ வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 2 கி.மீ முதல் 3 கி.மீ வேகத்தில் கிழக்கில் இருந்து வீசும். வெப்ப அளவுகள் இயல்பை விட குறைவாக உள்ளதால் பண்ணைக் கோழிகளிடையே தீவன எடுப்பு அதிகரித்து இருக்கும். தீவனத்தின்

ஈரப்பதமும் சற்று அதிகரித்து காணப்படும். இதனால், தீவனத்தில் எரிசக்தியின் அளவை அதிகரிக்க வேண்டும். இது தீவன எடுப்பை கட்டுப்படுத்துவதுடன், முட்டையில் எடையைக் குறைக்காமல் இருக்க உதவும். கோழிகள் பெரும்பாலும் குடல்புண், இறக்கை அழுகல் நோய், மேல்மூச்சுக் குழாய் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்தது. எனவே, பண்ணையாளர்கள் தீவன மூலப்பொருள்களில் கிளாஸ்ட்ரிடியம் நோய்க் கிருமியின் மாசுபாடு உள்ளதா என ஆய்வு செய்து, தரமான மூலப்பொருட்களை உபயோகப்படுத்த வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>விவசாய தொழிலாளர்கள் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பதிவு செய்வது அவசியம்</u>**

நாமக்கல், : விவசாய தொழிலாளர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ள வேண்டும் என அமைச்சர் தங்கமணி பேசினார். வருவாய்த்துறை சார்பில், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாமக்கல்லில் நடந்தது. விழாவிற்கு கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கினார். எம்எல்ஏக்கள் பாஸ்கர், தனியரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொழில்துறை அமைச்சர் தங்கமணி, பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது: தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இந்த உதவிகளை பெற விவசாய கூலி தொழிலாளர்கள், தங்களை உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினராக பதிவு செய்து கொண்டு, அடையாள அட்டை வைத்திருப்பது அவசியம். விவசாய கூலி வேலை செய்யும்போது, மரணம் அடைய நேரிட்டால் அவரது குடும்பம் தவிக்கக்கூடாது என்பதற்காக ரூ.1 லட்சம் நிவாரண நிதி வழங்கப்படுகிறது. மேலும், விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பதற்கு கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி,

மருத்துவ நிதிஉதவி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு அவர் பேசினார். விழாவில், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 340 பயனாளிகளுக்கு ரூ.27.89 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார். நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் காளிமுத்து நன்றி கூறினார். நிகழ்ச்சியில் சமூக நல பாதுகாப்பு திட்ட தனித்துணை கலெக்டர் சூரியபிரகாஷ்(பொ), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மாலதி, நாமக்கல் நகர்மன்றத் தலைவர் கரிகாலன், நாமக்கல் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் கவிதா சந்திரன், நாமகிரிப்பேட்டை ஒன்றியக்குழு தலைவர் பொன்னுசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். அமைச்சர் தங்கமணி பேச்சு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இதில் அமைச்சர் தங்கமணி பயனாளி ஒருவருக்கு நலத்திட்ட உதவி வழங்கினார்.

**<u>அரியலூரில் 30ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

அரியலூர், : அரியலூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 30ம் தேதி நடைபெறுகிறது. இதுகுறித்து அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அரியலூர் கலெக்டர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்ட மன்றத்தில் வரும் 30 தேதியன்று காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற இருக்கிறது. இக்கூட்டத்தில் வேளாண் சம்பந்தமாக நீர்பாசனம், கடன் உதவிகள், வேளாண் இடுபொருட்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்களுடன் விவாதிக்கப்படும். எனவே அன்றைய தினம் விவசாய சங்க பிரதிநிதிகள் தவறாமல் கலந்துகொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

# <u>மக்காச்சோள பயிரில் வேர் புழுக்கள் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி?வேளாண் துறை யோசனை</u>

பெரம்பலூர், : மக்காச்சோள பயிரில் வேர் புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத் தலைவர் கவிமணி, வேளாண் உதவி இயக்குநர் அண்ணாதுரையுடன் பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மக்காச்சோள பயிர்களை பார்வையிட்டுள்ளார். இதில் ஆலத்தூர் வட்டாரம், சிறுகன்பூர், தெற்கு மாதவி உள்ளிட்ட கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மக்காச்சோள இளம்பயிரில் வேர்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. வேர்ப்புழுவினால் பாதிக்கப்பட்ட பயிர்கள் எவ்விதமான சக்தியினையும் எடுக்க முடியாமல் இறந்துவிடும். பாதிக்கப்பட்ட பயிர்களைப்பிடுங்கி மண்ணை தோண்டிப் பார்த்தால், வேர்ப்புழு மண்ணில் இருப்பது தெரியவரும். இப்புழுக்கள் பார்ப்பதற்கு தென்னை மரத்தை தாக்கும் புழுபோல் காணப்படும். பாதிக்கப்பட்ட பயிரின் வேர் பகுதி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும். இத்தகைய வேர்ப்புழுவினைக் கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீருக்கு 3மில்லி என்ற அளவில் கலந்து பாதிக்கப்பட்ட பயிரின் வேர்ப்பகுதியில் ஊற்றவேண்டும். மேலும் வேர்ப்புழுவினால் பாதிக்கப்பட்ட பயிர் போதுமான சத்து கிடைக்காமல் பாதிக்கப்படும். இதனை நிவர்த்தி செய்வதற்கு நீரில் கரையும் உரமான 19:19:19 என்ற உரத்தினை 1 லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்துதெளிக்க வேண்டும். மேலும் இது தொடர்பாக எதுவும் சந்தேகம் ஏற்படுமாயின் தங்கள்பகுதி வேளாண் உதவி அலுவலரை அணுகி விவசாயிகள் பயன் பெற வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என வேளாண்மைத் துறை சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிராம்பட்டினத்தில் 23 மி.மீ மழை பதிவு

தஞ்சை, : தஞ்சையில் கடந்த 3 நாட்களாக இடைவெளி விட்டிருந்த மழை நேற்று முன்தினம் ஒரு சில இடங்களில் பெய்தது. அதிராம்பட்டினத்தில் 23 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 18ம் தேதி துவங்கிய மழை 22ம் தேதி வரை பெய்தது. அதன்பின்னர் இடைவெளி விட்டிருந்த மழை நேற்று முன்தினம் மாலை ஒரு சில இடங்களிலும், இரவில் ஒரு சில இடங்களிலும் பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் நேற்று காலை வரை பதிவான மழையளவு (மி.மீ): அதிராம்பட்டினம் 23, கும்பகோணம் 9.20, பாபநாசம் 3.6, தஞ்சை 8, திருக்காட்டுப்பள்ளி 12, கல்லணை 17, மஞ்சலாறு 11.2, நெய்வாசல் தென்பாதி 11.60, பூதலூர் 10.80, ஒரத்தநாடு 6.50, மதுக்கூர் 12.60, பட்டுக்கோட்டை 7, பேராவூரணி 2 என்று மழையளவு பதிவாகியுள்ளது.

## வீணாக கடலில் கலக்கும் மழைநீரை சேமிக்க குட்டை

நாகை, : நாகை ஒன்றியம் பொரவச்சேரியில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக ஒன்றிய நிர்வாகிகள் கூட்டம் ஒன்றிய செயலாளர் அய்யாப்பிள்ளை தலைமை யில் நேற்று நடைபெற்றது. ஒன்றிய துணை செயலாளர் ராஜேந்திரன், ஒன்றிய சிறு பான்மை பிரிவு அமைப் பாளர் ஷேக் அலாவுதீன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கண்ணன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் பழனிவேலு, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் நவநீதம், ஊராட்சி செயலாளர் ராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகை மாவட்டத்தில் மத்திய அரசு கட்டுப்பாட்டில் நவீன உயர்தர மருத்துவமனை தொடங்க வேண்டும். நாகை பகுதி யில் வீணாக கடலில் கலக் கும் மழைநீரை சேமிக்கும் வகை யில் சிறுசிறு குட்டைகளை அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட

பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் தமிழ் இனியன் நன்றி கூறினார்.

## இலவச வெள்ளாடு பயனாளிகள் தேர்வு செய்ய கிராமசபை கூட்டம்

பாபநாசம், : பாபநா சம் ஒன்றியம் சத்தியமங்கலம் ஊராட்சியில் இலவச வெள்ளாடு வழங்க பயனாளிகள் தேர்வுக்கான சிறப்பு கிராமசபை கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. ஊராட்சி தலைவர் கலாராணி, பாபநாசம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் கோபிநாதன், கிராம நிர்வாக அலுவலர் ஆறுமுகம், ஊராட்சி துணைத்தலைவர் தேவேந்திரன், ஊராட்சி செயலாளர் பத்மநாபன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாமில் 316 மனுக்கள் வந்ததில் 62 பேர் தேர்வாகினர். பாபநாசம் ஒன்றியம் பெருமாள் கோயில் ஊராட்சியில் நடந்த கிராமசபை கூட்டத்தில் ஊராட்சி தலைவர் ராஜேந்திரன், துணைத்தலைவர் கோவிந்தராஜ், உறுப்பினர் சிகா மணி, ஊராட்சி செயலாளர் கதிரேசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். ரகுநாதபுரம் ஊராட்சியில் நடந்த கிராமசபைக்கு தலைவர் ஜெய்சங்கர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் டேனியல் பங்கேற்றனர். மேல கபிஸ்தலம் ஊராட்சியில் தலைவர் மஞ்சுளா, பசுபதிகோயிலில் ஊராட்சி தலைவர் நடராஜன், மணலூரில் ஊராட்சி தலைவர் ஜெயந்தி, உமையாள்புரத்தில் ஊராட்சி தலைவர் முருகேசன், சூலமங்கலத்தில் ஊராட்சி தலைவர் மணிமாறன் தலைமையில் கிராமசபை கூட்டம் நடந்தது.

## தொடர் மழை எதிரொலி சக்கரக்கோட்டை கண்மாய்க்கு நீர்வரத்து அதிகரிப்பு

ராமநாதபுரம், : தொடர் மழையால் ராமநாதபுரம் அருகே உள்ள சக்கரக்கோட்டை கண்மாய்க்கு நீர்வரத்து அதிகரித்து நிரம்பி வருகிறது. ராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு அருகே உள்ளது சக்கரக்கோட்டை கண்மாய். எட்டாயிரத்து 850 மீட்டர் நீளம், 380 மில் லியன் கன அடி கொள்ளவும் கொண்டது. இக்கண்மாய் மூலம் ஆர்.எஸ்.மடை,

அம்மன்கோயில், சக்கரக்கோட்டை, அச்சடிப்பிரம்பு, பால்கரை உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 1681.69 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இக்கண்மாய் நிரம்பினால் விளைநிலங்கள் மட்டுமல்லாது, நிலத்தடி நீர்மட்டமும் உயரும் வாய்ப்புள்ளது. இக்கண்மாய்க்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடும் அனுமதி இல்லை. மழை பெய்தால் மட்டுமே கண்மாய் நிரம்பும். ராமநாதபுரம் பெரிய கண்மாய் நிரம்பியதும் இக்கண்மாய்க்கு தண்ணீர் திறந்துவிடப்படும். அதுவும் வீணாகும் தண்ணீரை கடலுக்கு அனுப்புவதற்காக, பெரிய கண்மாயிலிருந்து இக்கண்மாய்க்கு தண்ணீர் திறந்துவிடப்படும். இக்கண்மாய் நிரம்பினால் பெரிய நீர்த்தேக்கம் போல் காட்சியளிக்கும். ஏராளமான வெளிநாட்டு பறவைகளும் குவியும். இதனை ராமநாதபுரம், கீழக்கரை உள்ளிட்ட சுற்றுவட்டார மக்கள் வந்து பார்வையிடுவர். இக்கண்மாய் கடந்த 2012ம் ஆண்டு பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டு, வனத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் பறவைகளுக்காக மணல் குன்றுகள் அமைக்கப்பட்டு, நாட்டுக்கருவேல மரங்கள் நடும் பணியும் நடைபெற்று வருகிறது. வறண்டு கிடந்த இக்கண்மாய் கடந்த சில நாட்களாக பெய்த வடகிழக்கு பருவ மழையால் நிரம்பத் துவங்கியுள்ளது. தொடர்ந்து கன மழை பெய்தால் இக்கண்மாய் நிரம்பிவிடும். இதனால் ராமநாதபுரம் நகரின் நிலத்தடி நீர்மட்டமும் உயரும். இக்கண்மாயை பெரிய நீர்த்தேக்கமாக்கி, பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட் டுள்ளது. இதற்கேற்ப பார்வையாளர்கள் கோபுரம், அமரும் வசதிகள், கூடாரம் போன்றவை அமைத்தால் இப்பகுதி மக்களிடம் நல்ல வரவேற்பை பெறும். மேலும் விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக அமையும். இக்கண்மாய்க்கு வைகை ஆயக்கட்டிலிருந்து தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

## தொண்டி பகுதியில் விவசாயப் பணிகள் தீவிரம்

தொண்டி, : தொடரும் மழையால் தொண்டி பகுதி யில் விவசாயப் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. சில இடங்களில் மழைநீர் வெளியேற வழியன்றி வயல்வெளியில் தேங்கியுள்ளதால் பயிர்கள் அழுகி வருகின்றன. ராமநாதபுரம் மாவட்டத்தின் நெற்களஞ்சியமான திருவாடானை தாலுகாவில் சுமார் 42 ஆயிரம் எக்டேர் பரப்பில் நெல் விவசாயம் நடைபெறுகிறது. கடந்த இரண்டு வருடங்களாக இப்பகுதியில் பருவமழை போதிய அளவில் பெய்யாததால் விவசாயம் சரிவர நடைபெறவில்லை. அதிக விளைச்சல் தரக்கூடிய பகுதிகளான நம்புதாளை, முகிழ்தகம், திருவெற்றியூர் பிர்கா பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் இந்த வருடம் விவசாயப் பணியை துவங்கலாமா என யோசித்து வந்தனர். இந்நிலையில் கடந்த சில வாரங்களாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நெல் விதைப்பு பணி யை துவக்கினர். விதைத்த பயிர்கள் தற்போது ஓரளவு முளைத்துவிட்ட நிலையில், மருந்து தெளிப்பு, உரமிடுதல் போன்ற பணிகளில் ஈடு பட்டு வருகின்றனர். இருப்பி னும் சில பகுதிகளில் மழை நீர் வெளியேற வழியின்றி வயலில் தேங்கியுள்ளது. இதனால் முளை த்த பயிர்கள் அழுகி வருவ தாக விவசாயிகள் கூறுகின்றனர். இது குறித்து விவசாயி கருப்பையா கூறுகையில், `கடந்த இரண்டு வருடங்களாக போதிய அளவில் மழை இல்லாததால், விவசாயப் பணிகள் முழுவீச்சில் நடைபெறவில்லை. இந்த ஆண்டும் மழை பெய் யுமா என்ற கேள்வி எழு ந்தது. விவசாயப் பணிகளை மேற்கொள்ள தயக்கம் ஏற்பட்டது. ஆனால், கடந்த சில வாரங்களாக மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவது நம்பிக்கை அளிப்பதால், விவசாயப் பணிகள் தீவிரம் அடைந்துள்ளது. தற்போது மழை போதிய அளவில் உள்ளது. இம்முறை விவசாயம் நல்ல முறையில் நடைபெறும் என நம்புகிறோம். இருந்தபோதும், சில

இடங்களில் மழைநீர் வெளியேற வழி யின்றி வயல்வெளிகளில் தேங்கியுள்ளது. இதனால், முளைத்து சில நாட்களே ஆன நெற்பயிர்கள் அழுகி வருவது வருத்தம் அளிக்கிறது என்றார்.

**<u>சங்கரன்கோவில் தாலுகாவில் கனமழை பனவடலிசத்திரம் பகுதியில் குளங்கள் நிரம்பின</u>**

சங்கரன்கோவில், : சங்கரன்கோவில் தாலுகா பனவடலிசத்திரம் பகுதிகளில் பல வருடங் களுக்கு பின் பெய்த கனமழையால் குளங்கள் நிரம்பியது. இதனால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் தாலுகா வில் மிகவும் வறட்சியான பகுதியாக மேலநீலிதநல்லூர் விளங்கி வருகிறது. எப்போதும் வானம் பார்த்த பூமியாக உள்ள இப்பகுதியில் சுமார் 10 ஆண்டுகளாக கனமழை என்பது பெயரளவிற்கு மட்டுமே இருந்து வந்தது. ஆனால் கடந்த சில தினங்களாக மேலநீலிதநல்லூர் யூனியனுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் பெய்த கனமழையால் குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்தது. மேலும் பனவடலிசத்திரம், தெற்குபனவடலி, வடக்குபனவடலி, மருக்காலங்குளம், பலபத்திராமபுரம், தங்கம்மாள்புரம், சீவலசமுத்திரம், மேசியாபுரம், வன்னிக்கோனேந் தல், தேவர்குளம், அடைக்கலாபுரம் ஆகிய கிராமங்களில் கடந்த 10 வருடங்களுக்கு பின்னர் தற்போது தான தொடர் கனமழை பெய்துள்ளது. இதனால் இப்பகுதிகளில் உள்ள பல குளங்கள் நீண்ட வருடங்களுக்கு பின்னர் தற்போது நிரம்பியுள்ளது. கடந்த பல மாதங்களாக குடிப்பதற்கும், விவசாய பயிர்களை பாதுகாப்பதற்கும் விலை கொடுத்து தண்ணீர் வாங்கிய இப்பகுதி மக்க ளுக்கு, தற்போது பெய்த கனமழையால் பூமி குளிர்ந்து நிலத்தடி நீர் மட்டமும் உயர்ந்துள்ள தால் ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் உயர்ந்துள் ளது. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சங்கரன்கோவில் தாலுகாவில் சிலதினங்களாக பெய்த கனமழையினால் மேசியாபுரம் விளைநிலங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலர் சந்தீப் சக்சேனா தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக நியமனம் அடுத்த வாரம் பொறுப்பு ஏற்கிறார்</u>

சென்னை, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலாளராக இருந்த சந்தீப் சக்சேனா தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

<u>பிரவீன்குமார் விடுவிப்பு</u>

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி பதவியில் இருந்து தன்னை விடுவிக்கும்படி மத்திய தேர்தல் கமிஷனுக்கு பிரவீன்குமார் கடந்த சில வாரங்களுக்கு முன்பு கடிதம் எழுதி இருந்தார். இதைத்தொடர்ந்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் அந்த பொறுப்பில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு பதிலாக, தமிழக புதிய தலைமை தேர்தல் அதிகாரியாக சந்தீப் சக்சேனாவை நியமித்து இந்திய தலைமை தேர்தல் ஆணையம் நேற்று உத்தரவிட்டுள்ளது. இதை தமிழக அரசும் உறுதிப்படுத்தியுள்ளது.

<u>முறைப்படி அறிவிப்பு</u>

இது குறித்து தமிழக அரசின் முதன்மை செயலாளர் மோகன் வர்கீஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

இந்திய தலைமை தேர்தல் ஆணையம் தமிழக அரசுடன் கலந்து ஆலோசித்து, தமிழக அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலராக இருக்கும் சந்தீப் சக்சேனாவை தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. சந்தீப் சக்சேனா வகித்து வந்த வேளாண் துறை முதன்மைச்செயலர்

பொறுப்புக்கு நியமிக்கப்படுபவர்கள் விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த பணி மாற்ற உத்தரவுகள் முறைப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் அந்த செய்திக்குறிப்பில் கூறியுள்ளார்.

அடுத்த வாரம் பொறுப்பு ஏற்பு

தமிழக புதிய தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள சந்தீப் சக்சேனா மத்திய பிரதேசத்தை சொந்த மாநிலமாக கொண்டவர். எம்.டெக். படித்துள்ளார். 1989–ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரியானார். 1990–ம் ஆண்டு சேலத்தில் உதவி கலெக்டராக பணியாற்றினார். 1993–ம் ஆண்டு கால கட்டத்தில் கோவை, திண்டுக்கல் மாவட்ட கலெக்டராக (கூடுதல்) பொறுப்பு வகித்தார். 2001–ம் ஆண்டு கடலூர் கலெக்டராக பணியாற்றினார். போக்குவரத்து துறையில் நிர்வாக இயக்குனராகவும், வணிகவரித்துறையில் கூடுதல் கமிஷனராகவும் பணியாற்றினார். தொடர்ந்து அவர் தமிழக அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றி, தமிழக வேளாண் துறை முதன்மைச்செயலராக இருந்து வந்தார். தற்போது தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக அவர் பொறுப்பு ஏற்க உள்ளார். அவர் அடுத்த வாரத்தில் பொறுப்பு ஏற்பார் என்று கூறப்படுகிறது.

## காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை: மேட்டூர் அணைக்கு ஒரேநாளில் 7ஆயிரம் கனஅடி நீர்வரத்து அதிகரிப்பு



காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நேற்று ஒரேநாளில் 7 ஆயிரம் கன அடி நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

பருவமழைதீவிரம்

மேட்டூர் அணையின் மூலம் பாசன வசதி பெறும் காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் கால்வாய் பாசன பகுதிகளில் பருவமழை பெய்து

வருவதால் டெல்டா பாசனம் மற்றும் கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பருவமழை தீவிரமடைந்துள்ளது. கடந்த ஒரிரு நாட்களாக தொடர்மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக இருந்தது. 7 ஆயிரம் கன அடி இந்த அளவு நேற்று வினாடிக்கு 17 ஆயிரத்து 256 கனஅடியாக அதிகரித்தது. நேற்று ஒரேநாளில் மட்டும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 7 ஆயிரம் கனஅடி அளவிற்கு அதிகரித்துள்ளது. இதனால் நேற்று முன்தினம் 93.47 அடியாக இருந்த அணை நீர்மட்டம், நேற்று 94.72 அடியாக உயர்ந்தது. கடந்த சில நாட்களாக அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றம் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் மேட்டூர் அணை நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

## அந்தியூரில் பலத்த மழை: 3 ஆண்டுகளுக்கு பிறகு வறட்டுப்பள்ளம் அணை நிரம்பியது



அந்தியூரில் பலத்த மழை பெய்து வருவதால் 3 ஆண்டுகளுக்கு பிறகு வறட்டுப்பள்ளம் அணை நிரம்பி உபரிநீர் வெளியேறுகிறது.

### வறட்டுப்பள்ளம் அணை நிரம்பியது

அந்தியூர் அருகே உள்ளது வறட்டுப்பள்ளம் அணை. இந்த அணை மேற்கு தொடர்ச்சி மலையின் 2 மலைப்பகுதிக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ளது. இந்த அணைக்கு தாளக்கரை, தாமரைக்கரை மலைப்பகுதிகளில் பெய்யும் மழை நீர் வருகிறது. இந்த அணையின் தண்ணீர் மூலம்

அந்தியூர், கெட்டிசமுத்திரம், வட்டக்காடு, பச்சாம்பாளையம், ஆப்பக்கூடல், வேம்பத்தி, அத்தாணி உள்ளிட்ட அந்தியூரை சுற்றுப்புற பகுதிகளில் உள்ள 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது. கடந்த 2011–ம் ஆண்டு அணை முழு கொள்ளவான 33.33 அடியை எட்டியது. இதனால் வனப்பகுதியில் உள்ள வனவிலங்குகள் இந்த அணைக்கு வந்து தண்ணீர் குடித்துவிட்டு செல்லும். அதன்பிறகு அணை நிரம்பாமல் இருந்தது.

<u>வெள்ள அபாய எச்சரிக்கை</u>

இந்தநிலையில் கடந்த 10 நாட்களாக அந்தியூர் பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் அணை நேற்று தனது முழுக் கொள்ளளவான 33.33 அடியை எட்டி நிரம்பி வழிகிறது. இந்த தண்ணீர் உபரிநீராக வெளியேறி அந்தியூர் பெரிய ஏரி, சந்தியபாளையம் ஏரியில் சென்று கலக்கிறது. மொத்தம் வினாடிக்கு 1,500 கனஅடி தண்ணீர் உபரிநீராக வெளியேறுகிறது. இதனால் வறண்டு கிடந்த இந்த ஏரிகள் நிரம்பத் தொடங்கி உள்ளன. உபரிநீர் வெளியேறுவதையொட்டி வறட்டுப்பள்ளம் அணையில் அந்தியூர் தீயணைப்பு நிலைய அதிகாரி ராஜன் தலைமையில் தீயணைப்பு படை வீரர்கள் சேதம் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டு உள்ளனர்.அணையின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மேடான இடங்களுக்கு செல்லுமாறு வருவாய்த்துறையினர் தண்டோரா மூலம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்தனர்.

<u>போலீஸ் பாதுகாப்பு</u>

பர்கூர் மலைப்பகுதி தாளக்கரை, தாமரைக்கரையில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. அப்போது பலத்த சூறாவளி காற்று வீசியது. இந்த சூறாவளி காற்றால் அந்தியூரில் இருந்து கர்நாடக மாநிலம் செல்லும் ரோட்டில் தாமரைக்கரையில் உள்ள மலைவேம்பு மரம் நேற்று அதிகாலை 5.30 மணி அளவில் வேரோடு சாய்ந்து விழுந்தது. இதனால் அந்த வழியாக 3 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பர்கூர் மலைப்பகுதியில் உள்ள மலைகருப்பசாமி கோவில் பகுதியில் பெய்யும் மழைநீர் காட்டாற்று வெள்ளமாக பாய்ந்து நகலூர் கொண்டையம்பாளையம் ஏரியில் கலந்து வருகிறது. அந்த ஏரியில் இருந்து வெளியேறும் உபரிநீர் அத்தாணி பள்ளம் நீரோடையில் கலக்கிறது. தரைப்பாலத்தில் வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

**குண்டேரிப்பள்ளம் அணை நிரம்பியதால் வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடி உபரிநீர் வெளியேற்றம்**



கோபிசெட்டிபாளையம், வனப்பகுதியில் பெய்த கனமழையால் குண்டேரிப்பள்ளம் அணை நிரம்பியதால், அதிலிருந்து 8 ஆயிரம் கனஅடி உபரிநீர் வெளியேற்றப்பட்டது.

குண்டேரிப்பள்ளம் அணை

கோபிசெட்டிபாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் நேற்று முன்தினம் பகலில் வெயில் அடித்தது. நள்ளிரவில் பலத்த மழை பெய்தது. கோபிசெட்டிபாளையம், பங்களாப்புதூர், டி.என்.பாளையம், கொங்கர் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது. இதேபோல் விளாங்கோம்பை, கெம்பனூர், மல்லியதுருவம் வனப்பகுதியில் கனமழை பெய்தது. இதனால் குண்டேரிப்பள்ளம் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. நேற்று அதிகாலை 4 மணிக்கு குண்டேரிப்பள்ளம் அணைக்கு வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணை ஏற்கனவே நிரம்பி உள்ளதால் 8 ஆயிரம் கனஅடி தண்ணீரும் உபரிநீராக வெளியேறியது.

பாலம் சேதம்

அதைத்தொடர்ந்து குண்டேரிப்பள்ளம் ஓடையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. சில ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஓடை நிரம்பி 2 கரைகளையும்

தொட்டு செல்லும் அழகை, அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் நேற்று காலை கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் சென்று பார்வையிட்டனர். குண்டேரிப்பள்ளம் அணைக்கு செல்லும் வழியின் குறுக்கே ஓடை ஒன்று செல்கிறது. அந்த ஓடையில் அதிகமான தண்ணீர் சென்றதால் அதிலிருந்த சிறிய பாலம் சேதமடைந்தது.

<u>வெள்ள அபாய எச்சரிக்கை</u>

குண்டேரிப்பள்ளம் அணையில் இருந்து அதிக அளவு தண்ணீர் வெளியேற்றப்பட்டதால் கரையோரம் வசிக்கும் மக்களுக்கு பொதுப்பணித்துறை சார்பில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மாவட்ட கலெக்டர் பிரபாகரன், கோபி சப்–கலெக்டர் கிருஷ்ணன்உண்ணி, தாசில்தார் அசோக்குமார் ஆகியோர் குண்டேரிப்பள்ளம் அணையை பார்வையிட்டனர். இதைத்தொடர்ந்து அதிகாரிகள் ஆற்றங்கரையோரம் உள்ள வீடுகளுக்கு சென்று, ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் அருகில் உள்ள உறவினர்கள் வீட்டிற்கு சென்று தங்கும்படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இதேபோல் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கொடிவேரி அணையில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால், சுற்றுலா பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டு உள்ளது.

## <u>சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் தொடர் மழை: அறுவடை பணிகள் மந்தம்</u>

சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் கத்திரி, வெண்டை, அவரை, புடலை, பாகற்காய், மிளகாய் , பீட்ரூட், தக்காளி, காலிபிளவர் மற்றும் கீரை வகைகள் பரவலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அறுவடைக்கு பின்பு காய்கறிகள் பல்லடம், திருப்பூர், கோவை மற்றும் கேரள பகுதி மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஒன்றியத்தில் கடந்த 2 வாரங்களாக அவ்வப் போது தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக விவசாய விளை நிலங்களில் மழை நீர் தேங்கி சேறும், சகதியுமாக மாறியுள்ளது. மேலும்

அடிக்கடி மழை பெய்து வருவதால் விவசாய கூலி தொழிலாளர்கள் விவசாய பணிகளுக்கு வருவதில் ஆர்வம் காட்டவில்லை. இதன் காரணமாக சுல்தான்பேட்டை பகுதியில் காய்கறிகள், கீரை அறுவடை பணிகள் மந்த நிலையில் உள்ளன. உரிய நேரத்தில் காய்கறிகளை அறுவடை செய்து லாபம் பார்க்க முடியாததால் விவசாயிகள் தவித்து வருகின்றனர். மேலும் தொடர் மழையால் தக்காளி செடிகள் அழுகுதல், காய்கறி பயிர் செடிகளில் பூக்கள் உதிர்வு ஆகியவை விவசாயிகளை வேதனை அடையச் செய்துள்ளது.